**தலைப்பு 294 – தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப் பாய்ச்சல் கூற்று

#### (அ) மீண்டெழும் செலவினம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களாக ரூபா 518,695,940 தொகை காண்பிக்கப்பட்ட போதிலும், ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் அந்த செலவினம் ரூபா 538,024,050 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 19,328,110 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பாதீட்டு திணைக்களத்தின் மீண்டெழும் செலவினத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்ற சகல செலவினங்களும் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மூலதன மேம்படுத்தல்களுக்காக ஏற்படுகின்ற செலவினங்கள் ஆளணி வேதங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினமாக கணக்கீடு செய்தல் பிரச்சினைக்குரியதாக இருந்தமையை அறியத்தருகின்றோம். | காசுப் பாய்ச்சல் கூற்றில் மீண்டெழும் செலவினங்களுக்குரிய காசு வெளிப்பாய்ச்சல் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் செலவிடப்பட்டவை காசுப் பாய்ச்சல் கூற்றில் மானியங்கள் மற்றும் மாற்றல்களின் கீழ் எந்தவொரு கொடுப்பனவும் காண்பிக்கப்படாதிருந்ததுடன், ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 2,185,375 ஆக இருந்தது. | எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மானியங்கள் மற்றும் மாற்றங்களின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |

**(ஆ) மூலதன செலவினம்**

---------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல், கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதல் ஆக ரூபா 214,770,638 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் அச்செலவினம் ரூபா 193,257,154 ஆக இருந்தமையால் ரூபா 21,513,484 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மூலதன செலவினங்களின் கீழ் கொண்டுவரப்படுகின்ற சகல செலவினங்களும் பதியப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | காசுப் பாய்ச்சல் கூற்றில் மூலதன செலவினங்களுக்குரிய காசு வெளிப்பாய்ச்சல்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதியாக ரூபா 5,825,821,387 தொகை காண்பிக்கப்பட்ட போதும், திறைசேரி குறிப்புக்களின் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 5,681,980,290 ஆக | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி திறைசேரி குறிப்புக்களுடன் இணக்கம் செய்து |

| | | |
|---|---|---|
| இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 143,841,097 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன் வேறுபாட்டிற்கான காரணம் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.3 வைப்புக்கள்**

---------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பெறப்பட்டிருந்த ரூபா 899,710 தொகையான செயலாற்றல் காப்பீடு 2018 திசெம்பர் மாதத்தின் போது பணமாக்கப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2021 மே மாத கணக்கு பொழிப்பின் மூலம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இப்பெறுமதி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

---------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வைக்கப்பட வேண்டிய பிணை பணத்தின் அளவை தீர்மானிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் பிணை வைத்தல்களை மேற்கொண்டு பிணைப் பதிவேடு தயாரிக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணை பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநயாக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 08 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நோயின் காரணமாக விலங்கியல் பூங்காக்கள் பார்வையாளர்களுக்காக மூடப்பட்டமையும் பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தமையின் அடிப்படையிலும் இந்த சேமிப்புக்கள் ஏற்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான திட்டமொன்றுடனும் முகாமைத்துவத்துடனும் கூடிய மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை | 2021 இன் மூன்றாம் காலாண்டு முதல் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 21,621,561 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது உரித்துக் கோரப்படாத வைப்புக்களை அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1995 இன் 35 ஆம் இலக்க அளவிடல் அலகு நியமம் மற்றும் சேவை சட்டத்தின் 37 ஆம் பிரிவு. | பயன்படுத்தப்படுகின்ற நிறை அளவிடல் உபகரணங்கள் சரியாக பரீட்சிக்கப்படாமலும், முத்திரை பொறிக்கப்படாமலும் பயன்பாட்டிற்கு எடுத்தல் தவறாக இருந்த போதிலும், தெஹிவளை மிருகக் காட்சிசாலையின் களஞ்சியத்தில் உள்ள இயலளவு 150 கிலோ கிராம் ஆன இறைச்சியினை நிறுப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற இலக்ரோனிக் தராசு இயந்திரம் 2013 ஆம் ஆண்டின் பின்னர் முத்திரை | இந்த தராசு மீண்டும் இலக்கமிடுவதற்காக உரிய பிரிவிற்கு எழுத்து மூலமும் தொலைபேசியின் ஊடாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது . இதுவரையிலும் இந்த தராசு அளவையை சரிசெய்வதற்காக உரிய நிறுவனம் நடவடிக்கை எடுக்காதிருந்தமையால் எதிர்காலத்தில் மீள் நினைவூட்டல் | நிறை அளவிடல் உபகரணங்களுக் காக முறையான பரிசோதனையொன்றும் முத்திரை பொறித்தலும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பொறிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அந்த தராசு அங்கீகரிக்கப்பட்ட வழுவினை விஞ்சி நிறையினை குறைவாக காட்டுகின்றமை அளவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்த போதும், இது வரையிலும் அது திருத்தப்பட்டிருக்கவில்லை. | அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------------

**3.1 செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாமல் கைவிடப்பட்டமை**

----------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இயந்திர உபகரண நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 223,151,303 தொகையான 09 செயற்திட்டங்களுக்குரிய நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 88,905,549 தொகை உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிர்மாண நடவடிக்கைகள் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது எனவும் ஒப்பந்த நடவடிக்கைகளின் தாமதத்தினால் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான கடிதங்கள் உரிய நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டுள்ள இந்த நிர்மாணங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018, 2019 ஆம் ஆண்டுகளின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 257,672,853 தொகையான 05 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியின் போதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 208,921,963 தொகை ஒப்பந்த காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தன. | நிர்மாண நடவடிக்கைகள் செய்யப்படுவதற்கிடையே திட்டங்களை மாற்ற வேண்டி ஏற்பட்டிந்தமை, நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற காலத்தில் கொரோன தொற்று நோய் நிலைமை ஏற்பட்டிருந்தமை மற்றும் ஒப்பந்தகாரர்களின் தாமதம் போன்ற காரணங்களினால் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் இவ்வாறான தாமதம் ஏற்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | விரைவாக நிர்மாணங்களின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ நலிவுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பின்னவல யானைகள் சரணாலயத்தில் யானை நிறுத்திவைக்கப்படுகின்ற இடத்திற்கு அருகில் யானைச் சாணம் மற்றும் எஞ்சிய உணவுப் பகுதிகள் குவிக்கப்பட்டிருந்தமையால் சுற்றாடல் அசுத்தமாகி காணப்பட்டது. | இந்த நிலைமையை தடுப்பதற்காக குப்பைகளை அரைக்கும் இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் யானைச் சாணம் மற்றும் குப்பை கூழங்களை சிறு கூறுகளாக்கி கூட்டுப்பசளையாக காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக | யானைச் சாணம் மற்றும் எஞ்சிய உணவுப் பகுதிகள் என்பவற்றை அகற்றுவதற்காக வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | கால்நடை வைத்தியர்களினால் விலங்குகளுக்கு வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட உணவுகள் அளவிடப்படாமல் கைப்பழக்கம் மற்றும் அனுபவ அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் உணவுகள் குறித்த அளவில் வழங்கப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | விலங்குகளின் எண்ணிக்கை மற்றும் போசணைப் பிரிவில் சேவையாற்றகின்ற ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் சகல உணவுகளும் நிறை அளவிடப்பட்டு சகல விலங்குகளுக்கும் வழங்குதல் பிரயோக ரீதியில் வசதியீனமாக இருந்தமையால் எதிர்காலத்தில் நடைமுறைச் சாத்தியம் உள்ள அளக்கும் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | விஞ்ஞான ரீதியிலான அளவிடல் உபகரணங்களின் அடிப்படையில் விலங்குகளின் நாளாந்த உணவுத் தேவைகள் தீர்மானிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கோனபல பன்னையில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் சரியான திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதில் பயிர்ச்செய்கைகளை அதிகரித்து வெளி நிறுவனங்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற விலங்கு உணவுகளின் அளவைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பண்ணையில் புற்கள், கங்குங், வாழை மற்றும் கரும்பு மரங்கள் பயிர் செய்யப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் பண்ணைக்காக தேவையான தொழிலாளர்களின் எண்ணிக்கையை சேர்த்துக் கொண்டு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | பண்ணையில் ஆகக் கூடிய பயனைப் பெறும் வகையில் சரியான திட்டமொன்றின் பிரகாரம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தில் வெற்றிடமாக 170 பதவிகள் காணப்பட்டதுடன், அதில் சிரேஷ்ட நிலையில் 4 பதவிகளும், இரண்டாம் நிலையில் 33 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. | இது தொடர்பாக அரச நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அந்த நடவடிக்கைகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | சேவை தேவையை கவனத்தில் கொண்டு வெற்றிட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |